# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 90/2020 நாள்.20.11.25

PW1- திருமதி நந்தினிபிரியா த/பெ. திரு. கோவிந்தசாமி

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்தை பொறுத்து 1.10.2018 என் தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல்செய்தேன் என்றால் ஆமாம். என் அப்பா எழுதி வைத்த செட்டில்மெண்ட் விபரம் அவர் இறக்கும் வரை எனக்கு தெரியாது என்றால் தெரியும். செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் மூல ஆவணங்களை என் அப்பா என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் அப்பாவிடமிடம்தான் இருந்தது. தற்போது வரை அவை என்னிடம் இல்லை என்றால் ஆமாம். என் அப்பாவுக்கும் 2ஆம் பிரதிவாதிக்கும் DVC வழக்கு இருந்தது என்றும் அதில் மாதம் ரூ.4000/- ஜீவனாம்சம் கொடுக்க உத்தரவாகியிருந்தது என்றால் தெரியாது. மேற்கண்ட விபரத்தை வாரிசு சான்று பெறும் வழக்கிலேயே எனக்கு தெரியும் என்றால் தெரியவில்லை. DVC வழக்கில் ரூ.4000/- ஜீவனாம்சம் கொடுக்க மேற்கண்ட உத்தரவுதான் என்னிடம் காண்பிக்கபடுபவை என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்காக என் அப்பா பணம், நகை பிரதிவாதியிடமிருந்து வாங்கி கொண்டதாக குடும்பத்தில் பஞ்சாயத்து நடந்தது என்றால் இல்லை. அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் அப்பாவின் லாக்கரில் உள்ளது. அது எந்த வங்கி லாக்கர் என்றால் இந்தியன் வங்கி, தோம்மன்குடிசையில் உள்ளது. அந்த ஆவணங்களை நான் வாங்க முயற்சி செய்தேனா என்றால் வாரிசு சான்று வழக்கு நடந்ததால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வழக்கு முடிந்தபிறகு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய கட்டாயத்தின்பேரில் என்பெயரில் என் அப்பா எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.
(ஒம்/- பா. நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.